1972 மார்ச் 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அரசாங்கப் போக்கு வரத்துத் துறைக்கான எல்லா டயர்களும் இந்த இரண்டு இடங்களிலேதான் புதுப்பிக்கப்படுகின்றன. வெளியிலே யாருக்கும் தரப்படுவதில்லே.

திரு. ஜே. ஜேம்ஸ் : நாகர்கோயிலில் டயர் புதுப்பிக்கும் பிரிவுக்குத் தேவையான ஆட்களை நியமிப்பதற்குள்ள அதிகாரம் அங்கிருக்கும் அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அங்கு இன்னும் பல சிப்பந்திகள் தேவைப்படுகின்றனர். அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்றுதான் பல இடங்களில் போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரியில் இருக்கும் ஜாயிண்ட் டைரக்டர் அவர்களுக்கு முழு அதிகாரமும் தரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினு எண் 1, கேள்வி எண்கள் 376, 377, 378 ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க 11—3—1972-க்கு தள்ளி வைக்கப்படுகின்றன.

வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(3) அமைச்சரின் அறிக்கை.

அமைச்சர் திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் பதவி விலகல் குறித்தும் திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Mr. Speaker, Sir, The Hon. Thiru A. P. Dharmalingam, Minister for Agriculture

resigned as Minister for Agriculture and on the advice of the Hon. Chief Minister, the Governor has accepted his resignation. However, on the advice of the Hon. Chief Minister, the Governor is pleased to appoint Thiru Mannai Narayanaswami as Hon. Minister for Agriculture.

(1) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) அமைச்சர் பதவி விலகலைப்பற்றிய அறிக்கையை முதல் அமைச்சர் அளிக்காதது, அதுபற்றிய அறிவிப்பை முதலில் அவைக்கும் அளிக்காதது ஆகியவை குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, இன்றைய தினம் இம்மாதிரியான முக்கிய அறிவிப்பைச் சபைக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற பொறுப்பு முதலமைச்சரைச் சார்ந்தது. முதலமைச்சர் இந்த அவைக்கு வராமல், கல்வி அமைச்சர் இந்த அறிவிப்பைத் தருவதற்குக் காரணம் என்ன என்பதைத் தலைவர் மூலமாகக் கேட்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: No doubt under Rule 82 a statement may be made by a Minister on a matter of urgent public importance, with the consent of the Speaker. But before he made the statement, the news has come already in the papers yesterday evening. When the Assembly is in session, we must have priority over anything else.

சட்டசபையின் உரிமையைப் பாதிக்கக்கூடிய அளவுக்குச் செய்திகள் செய்தித்தாள்களில் வந்திருக்கின்றன. வெளியே எங்களைக் கேட்கிறார்கள் ‘ சட்டசபைக்குப் போனீர்களே ; இந்தச் செய்தி உங்களுக்குத் தெரியாதா ? இந்த மந்திரிசபை கவிழப் போகிறதா ? என்று கேட்கிறார்கள். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ராஜினாமாச் செய்த அமைச்சரின் இலாகா ரொம்ப முக்கியமான இலாகா, விவசாய இலாகா. புது மந்திரியை இங்கே காணோம். அவருக்கு ஜாயினிங் டைம் கொடுத்திருக்கிறார்களா ? ஒரு வாரம் கொடுத்திருக்கிறார்களா ?

When the House is in session, we must have priority over anything else.